செ. கு. எண்: 148 நாள்: 12.12.2016

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம் அவர்களின்

## ''மிலாதுன் நபி'' திருநாள் வாழ்த்துச் செய்தி

இறைதூதர் நபிகள் நாயகம் அவர்கள் பிறந்த திருநாளாம் "மிலாதுன் நபி'' திருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடும் இஸ்லாமியப் பெருமக்கள் அனைவருக்கும் எனது இதயம் கனிந்த ''மிலாதுன் நபி'' நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறைதூதர் நபிகள் நாயகம் அவர்கள், இவ்வுலகிற்கு எடுத்துரைத்த உயரிய போதனைகளான, "அனைத்து உயிர்களிடத்தும் அன்பு செலுத்துங்கள், அண்டை அயலாரிடம் நட்புறவுடன் இருங்கள், ஏழை எளியோருக்கு உணவளியுங்கள், இனிமையான சொற்களையே பேசுங்கள், பொறாமை கொள்ளாதீர்கள், பிறரை பற்றி குறை கூறாதீர்கள், தான தர்மம் செய்யுங்கள், தவறிழைப்போரை மன்னித்துவிடுங்கள்'' போன்றவற்றை மக்கள் மனதில் நிலை நிறுத்தி உண்மையுடனும், கருணையுடனும் வாழ்ந்தால், உலகில் அன்புமும், அறமும், மனிதநேயமும் தழைத்தோங்கும்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இஸ்லாமியப் பெருமக்களின் நல்வாழ்விற்காக செயல்படுத்திய திட்டங்கள் எண்ணற்றவை ஆகும். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், உலமாக்களின் மாதாந்திர ஓய்வூதியத்தினை 1500 ரூபாயாக உயர்த்தி வழங்கியது, புனித ரமலான் மாதத்தில் நோன்பு கஞ்சி தயாரிக்க பள்ளிவாசல்களுக்கு அரிசி வழங்கி வருவது, தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு வழங்கப்படும் ஆண்டு நிருவாக மானியத்தை 1 கோடி ரூபாயாக உயர்த்தியது, பள்ளிவாசல்கள், தர்காக்கள் போன்ற வக்ஃப் நிறுவனங்களில் பழுதுபார்ப்பு மற்றும் சீரமைப்புப் பணிகளுக்காக 3 கோடி ரூபாயில் வக்ஃப் நிறுவன மேம்பாட்டு நிதி உருவாக்கியது, தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு வழங்கப்பட்டு

வரும் ஆண்டு நிருவாக மானியத்தை 30 லட்சம் ரூபாயாக உயர்த்தியது, மாவட்ட முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்களுக்கு வழங்கப்படும் இணை மானியத் தொகை 1:1 என்பதிலிருந்து 1:2 என்ற விகிதாச்சாரத்தில் உயர்த்தப்பட்டு ஆண்டிற்கு 20 லட்சம் ரூபாய் வரை வழங்கி வருவது, பள்ளிவாசல்கள், தர்காக்கள் மற்றும் இதர வக்ஃப் நிறுவனங்களின் பெரிய அளவிலான பழுதுபார்ப்பு மற்றும் புனரமைப்பு மானியமாக இந்த நிதியாண்டு 60 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தது, நாகூர் தர்கா சந்தனக்கூடு திருவிழாவிற்கு தேவைப்படும் சந்தனக்கட்டைகளை வழங்கியது, உருது மொழியை முதல் அல்லது இரண்டாவது மொழியாகப் பயின்று 10 மற்றும் 12–ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவ, மாணவியருக்கு பரிசுத் தொகை உயர்த்தியது என்று சொல்லிக் கொண்டே போகலாம்.

இஸ்லாமிய சமுதாயத்தின் மேம்பாட்டுக்கென மாண்புமிகு அம்மா அவர்கள் முன்னெடுத்துத் தந்த இந்த சீரிய திட்டங்களை, புரட்சித்தலைவி அம்மாவின் அரசு இம்மியும் குறைவில்லாமல் தொடர்ந்து செயல்படுத்தும் என்று உறுதி கூறி, இறைதூதர் நபிகள் நாயகம் அவர்கள் பிறந்த இத்திருநாளில், உலகில் அமைதியும், சமாதானமும், சகோதரத்துவமும் தவழட்டும் என்று வாழ்த்தி, இஸ்லாமிய பெருமக்கள் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை எனது உளமார்ந்த “மிலாதுன் நபி” நல்வாழ்த்துகளை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

**ஓ. பன்னீர்செல்வம்**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**